सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

# புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆற்றிய உரை

150 YEARS OF CELEBRATING THE MAHATMA

**26 ஆகஸ்ட், 2019**

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

முனைவர் **கிரண் பேடி** அவர்கள்

**புதுச்சேரி சட்டப்பேரவையில்**

**ஆற்றிய உரை**

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. **– குறள்**

ஒரு பொருளின் தோற்றத்தை மட்டுமே கண்டு மதிப்பீடு செய்யாமல், அப்பொருளின் உண்மைத் தன்மை என்ன என்பதை ஆராய்ந்து தெளிவாக அறிவதே அறிவாகும்.

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே ! மற்றும் இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களே !***

**வணக்கம் !**

**பு**துச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 14வது சட்டமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மதிப்புமிக்க அவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்தத் தருணத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2.** இவ்வாட்சிப்பரப்பில் வசிக்கும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் நலனுக்காக இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள் மற்றும் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து நான் மிகவும் திருப்தி அடைந்துள்ளேன்.

3. இவ்வாட்சிப்பரப்பில் மக்களவைப் பொதுத் தேர்தல் 2019, சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் நடத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறே புதுச்சேரி மக்களும் பல்வேறு அரசியல் கட்சியினரும் எனது பாராட்டுதல்களுக்கு உரியவர்கள் ஆவர்.

4. இவ்வாட்சிப்பரப்பின் நிதி ஆதாரங்கள் அளவாகவே இருப்பதால், செலவினங்களை வருவாய்க்குத் தகுந்தவாறு சீர் செய்துகொள்ள வேண்டிய நிலையில் அரசு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், ஏழை எளிய மக்களின் நலன்களைப் பேணுவதற்கு தேவையான நிதியை அரசு தொடர்ந்து, தொய்வில்லாமல் ஒதுக்கீடு செய்து வருகிறது. கடந்த நிதி ஆண்டில் அரசின் செலவினம் ₹ 7,342 கோடியாக இருந்தது. இது 2018-19ஆம் நிதி ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீடான ₹ 7,881 கோடியில் 93.16 விழுக்காடாகும். நிதி குறைவாக இருந்தபோதிலும், புதுச்சேரி அரசு, தற்போது நடைமுறையிலுள்ள நலத்திட்டங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல், 2008-09ஆம் ஆண்டில் பெறப்பட்ட பொதுச்சந்தைக்

கடன் ₹ 351 கோடியை சென்ற ஆண்டு திருப்பிச் செலுத்தி உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**5.** மாநிலத்தின் பொருளாதார நிலையை நிர்ணயிப்பதற்கான முக்கிய குறியீடாக மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 2018-19ஆம் ஆண்டிற்கான இவ்வாட்சிப்பரப்பின் GSDP நடப்பு விலையில் ₹ 35,860 கோடியாகும். இது முந்தைய ஆண்டைவிட 11 விழுக்காடு அதிகமானதாகும். புதுச்சேரியின் தனிநபர் வருமானம் 2017-18ஆம் ஆண்டில் ₹ 2,03,583 ஆகும். இது 2018-19ஆம் ஆண்டில் ₹ 2,20,461 ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 விழுக்காடு கூடுதலாகும்.

**6.** இந்த அறிமுக உரையுடன், முந்தைய நிதி ஆண்டில் பல்வேறு துறைகளின்கீழ் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சில முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து இந்த மதிப்புமிக்க அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

## வேளாண் மற்றும் விவசாயிகள் நலன்

**7.** விவசாயம் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது. விவசாயிகளுக்குத் திறம்பட சேவை செய்வதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும்,

2018-19ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டபடி வேளாண் துறையானது "வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாட்சிப்பரப்பில் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மானிய விலையில் வேளாண் இடுபொருட்களை வழங்குதல், விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு இயற்கை விவசாயத்தைப் பெரிதும் ஊக்குவித்து வருகிறது. இதன்படி இயற்கை விவசாயம் பற்றிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**8.** வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறைக்கு தீர்வு காணும்பொருட்டு ₹ 89.83 கோடி செலவில், விவசாயத் தொழிலில், தக்க இயந்திரங்களை உபயோகித்தல், மானிய விலையில் இடுபொருட்கள் கிடைக்கச் செய்தல், விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவை நிலைநிறுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. "பயிர் உற்பத்தித் திட்டத்தின்"கீழ் விவசாயிகளுக்குத் தேவையான மானிய விலையிலான அத்தியாவசியமான வேளாண் இடுபொருட்கள், அட்டவணை இன விவசாயிகளுக்கு ₹ 67.30 இலட்சமும், இதர விவசாயிகளுக்கு ₹ 118 இலட்சமும் புதுச்சேரி பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 15,652 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**9.** புதுச்சேரி பகுதியில் சாகுபடிக்குப் பிந்தைய மானியமாக, ஹெக்டேர் ஒன்றுக்கு ₹ 5,000 என்ற அளவில் 3,217 பொது விவசாயிகளுக்கும், 258 அட்டவணை இன விவசாயிகளுக்கும் ₹ 1.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதியில் 2017-18ஆம் ஆண்டில் குறுவை நெல் சாகுபடி செய்த 609 விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிந்தைய மானியமாக ₹ 31 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2017-18ஆம் ஆண்டில் சம்பா நெல் சாகுபடிக்கான அறுவடைக்குப் பிந்தைய மானியமாக 3,193 பொது விவசாயிகள் மற்றும் 494 அட்டவணை இன விவசாயிகளுக்கு ₹ 1.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**10.** தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளம், வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய 22 திட்டங்களை ₹ 9.48 கோடி செலவில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**11.** புதுச்சேரி பகுதியில் 4,294 ஹெக்டேர் பரப்பளவில் நெல்சாகுபடி செய்த 4,997 விவசாயிகளும், காரைக்கால் பகுதியில் 4,878 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 4,803 விவசாயிகளும் மற்றும் ஏனாம் பகுதியில் 231 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்த 473 விவசாயிகளும் பயிர்

பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். இத்திட்டம் புதுச்சேரி பகுதியில் 86 விழுக்காடும், காரைக்கால் பகுதியில் 96 விழுக்காடும் மற்றும் ஏனாம் பகுதியில் 100 விழுக்காடும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**12.** புதுச்சேரி தட்டாஞ்சாவடி மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தேசிய வேளாண் விளைபொருட்கள் சந்தைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன. இங்கு கொண்டு வரப்படும் அனைத்து விளைபொருட்களும் மின் பரிவர்த்தனை (e-NAM Portal) மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, மத்திய அரசு ₹ 30 இலட்சம் வழங்கி உள்ளது. மேலும், புதுச்சேரியில் முதன்முதலாக விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு விதைநெல் மற்றும் காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உணவுப் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த 110 பெண் உறுப்பினர்களுக்கு தேனீ வளர்ப்புத் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு, மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் தேனீ வளர்க்க ஆவன செய்யப்பட்டுள்ளது. மேலும், தேனீ வளர்ப்பிற்கான கருவிகள் 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிடவும், வங்கிகள் மூலம் கடன் வசதி பெற்றிடவும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. வேளாண் கல்விக்காக,

2018-19ல் காரைக்காலில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரிக்கு (PAJANCOA) ₹ 13 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டது.

**கால்நடை பராமரிப்பு**

**13.** கால்நடை உற்பத்தி மற்றும் தரத்தை பேணுவதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும், மக்களுக்கு தேவையான புரதச்சத்து மிகுந்த உணவுகளும் கிடைப்பதால் புதுச்சேரி அரசு கால்நடைத்துறைக்கு முன்னுரிமை அளித்துள்ளது. 2018-19ஆம் ஆண்டில் இவ்வாட்சிப்பரப்பில் 49,200 மெட்ரிக் டன் பால், 113.73 இலட்சம் முட்டைகள் மற்றும் 14,627 மெட்ரிக் டன் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள பால் பொருட்கள் உற்பத்தி ஆலையை நவீனமயமாக்கும் பொருட்டு ₹ 34 கோடி செலவில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**14.** 3,24,242 கால்நடைகள், கோழிகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சை மற்றும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 64 கால்நடை நல சிகிச்சை முகாம்கள் புதுச்சேரி மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டன. 59,862 செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டு எதிர்காலத்தில் நம் விருப்பத்திற்கேற்ற உயர் ரக கலப்பின

கால்நடைக் கன்றுகளை உற்பத்தி செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது. 20,819 உயர் ரக மரபு கூற்றைக் கொண்ட கலப்பின கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், கால்நடை மற்றும் கோழிகள் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து கறவைப் பசுக்களின் உற்பத்தி திறன் மற்றும் சுகாதார நிலை குறித்த தகவல்களைச் சேகரிக்க உதவியாக பன்னிரண்டு இலக்கத் தனித்தன்மையுடைய அடையாள எண் (Unique Identification Number) கொண்ட தோடினை மாடுகளின் காதில் பொருத்தும் திட்டம் “விலங்கு உற்பத்தித்திறன் மற்றும் ஆரோக்கியத்திற்கான தகவல் வலையமைப்பு” மூலம் புதுச்சேரி மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**15.** கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் விதமாக இருவகைப் பயன்பாடு கொண்ட 8,214 கிரிராஜா வகை கோழிகள் அரசு கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டன. மேலும், 1,400 வான்கோழிகள், 50 விழுக்காடு மானியத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறப்பு கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் வாயிலாக 75 விழுக்காடு மானியத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களில் உறுப்பினர் அல்லாத விவசாயிகளுக்கு கன்றுத் தீவனம் வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, முருங்கப்பாக்கத்தில் கால்நடை மருத்துவ சேவையை அளிக்கும் பொருட்டு கால்நடை உதவி மையம் (Key Village Unit) ஒன்று

கட்டப்பட்டுள்ளது. இது விரைவில் திறக்கப்படும். ராஜீவ் காந்தி அரசு கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு ₹ 12 கோடி உதவிக்கொடை (Grant-in-aid) வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் இளங்கலை பாடப்பிரிவில் (B.V.Sc.) முன்பிருந்த 60 இடங்கள் 80 இடங்களாக அதிகரிக்கப்பட்டன.

**கலை மற்றும் பண்பாடு**

**16.** போட்டித் தேர்வுகளில் மாணவர்கள் திறம்படச் செயல்பட, குறிப்புப் புத்தகங்கள் (Reference Books) ₹ 12.50 இலட்சம் செலவில் ரோமன் ரோலண்ட் நூலகத்திற்கு வாங்கப்பட்டுள்ளன. ஏம்பலம், நெட்டப்பாக்கம், சுத்துக்கேணி மற்றும் திருவாண்டார்கோயில் ஆகிய இடங்களில் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வந்த அரசு கிளை நூலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள கலைஞர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் கலைமாமணி விருது பெற்றவர்களுக்கு ₹ 93 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 86 உள்ளூர் ஆசிரியர்களுக்கு கையெழுத்துப்படி மானியம் முதல் தவணையாக ₹ 5.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் கவி சம்மேளனம், காந்தி கவிதைகள் ஒப்புவித்தல் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**வணிக வரிகள்**

**17.** மாநிலத்தின் சொந்த வருவாயில் வணிக வரித்துறையின் பங்களிப்பு 45 விழுக்காடாக உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 2018-19ஆம் ஆண்டில் மத்திய அரசின் GST இழப்பீட்டுத் தொகை உள்பட வணிக வரித்துறை மூலம் ₹ 2,131 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இது முந்தைய ஆண்டு வருவாயான ₹ 1,859 கோடியை விட ₹ 272 கோடி கூடுதலாகும் (13.50 விழுக்காடு). 1-4-2018 முதல் GST சட்டத்தின்கீழ், ஈ-வே பில் (E-Way Bill) முறை புதுச்சேரியில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. GST நடைமுறைப்படுத்தப்பட்ட 1-7-2017 முதல், புதுச்சேரிப் பிரதேசத்தில் 5,294 வணிகர்கள் GST சட்டத்தின்கீழ் புதிதாகப் பதிவு செய்துள்ளனர்.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**18.** மாநில அரசின் திட்டத்தின்கீழ் 20 கிலோ இலவச அரிசி மாதந்தோறும் அனைத்து BPL / AAY குடும்ப அட்டைதாரர்களுக்கும், 10 கிலோ இலவச அரிசி மாதந்தோறும் அனைத்து APL குடும்ப அட்டைதாரர்களுக்கும், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் வழங்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதேபோல் மாகி பகுதிக்கு BPL / AAY குடும்ப அட்டைதாரர்களுக்கு 15 கிலோ இலவச அரிசியும், 5 கிலோ கோதுமையும், APL குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ இலவச அரிசியும், 5 கிலோ கோதுமையும் மாதந்தோறும்

வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் முன்பு, அரிசிக்குப் பதிலாகப் பணமாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. தற்போது 3.35 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசியாகவோ அல்லது பணமாகவோ உணவு மானியம் வழங்கப்படுகிறது.

**19.** பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நேரடிப் பணப்பயன் வழங்கும் முறையை (DBT) மத்திய அரசு செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள பயனாளிகளின் குடும்பத்திற்கு “அந்தியோதயா அன்ன யோஜனா” திட்டத்தின்கீழ் 35 கிலோ அரிசிக்கான தொகை ₹ 1,050.70 மற்றும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள அனைத்து சிவப்பு அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அரிசிக்கான தொகை நபர் ஒருவருக்கு ₹ 150.10 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறாக, மத்திய அரசு நிதியில் இருந்து மாதத்திற்கு சராசரியாக ₹ 10.67 கோடி செலவிடப்படுகிறது. இதன் மூலம் 1.71 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் பயனடைகிறார்கள்.

**பள்ளிக் கல்வி**

**20.** ஒருவரின் பண்புகள் மற்றும் குணநலன்களை நிர்ணயம் செய்வதில் பள்ளிக் கல்வி முக்கிய காரணியாக உள்ளது. நற்சிந்தனைகளை வளர்க்கவும், அறிவாற்றலைப் பக்குவப்படுத்தவும், நாம் பயிலும் கல்வி வழிவகுக்க வேண்டும். போட்டி நிறைந்த இந்த தற்கால உலகில் கல்வி ஒரு அடிப்படைத்

தேவையாகும். சிறார்களிடையே பள்ளிக் கல்வியை மேம்படுத்தும் வகையில், புதுச்சேரி அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(i) 1,07,851 மாணாக்கர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் சீருடைகள் வழங்கியுள்ளது.

(ii) ஒரு ரூபாய் சலுகைப் பேருந்து கட்டணத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

(iii) அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விழுக்காட்டை அதிகரிக்கும் வகையில் பாடவாரியாகச் சிறப்பு வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றன.

(iv) புதுச்சேரியில் 3 மையங்களிலும், காரைக்காலில் ஒரு மையத்திலும் “நீட்” (NEET) தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

(v) பெருநிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு (CSR) மற்றும் ரூர்பன் (RURBAN) திட்டத்தின்கீழ் 133 அரசுப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(vi) “அட்டல் புதுமைத் திட்டத்தின்”கீழ் அட்டல் சீராக்க அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்க 21 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

(vii) 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜப்பானில் ஒரு வாரத்திற்கு நடைபெற்ற "சகுரா" விஞ்ஞான பரிமாற்றத்திட்டத்தில் 3 மாணவர்களும், ஒரு மேற்பார்வையாளரும் பங்கேற்றனர்.

(viii) பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற வகுப்பைச் சேர்ந்த 24,996 மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு ஊக்கத்தொகைத் திட்டத்தின்கீழ் ₹ 1.52 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**21.** அரசுப் பள்ளிகளில் பயிலும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு 2018-19ஆம் ஆண்டில் கல்வித்துறையின் சீரிய முயற்சியின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பாராட்டத்தக்க தேர்ச்சி விழுக்காட்டினை கீழ்க்காணும் அட்டவணை மூலம் அறியலாம்.

| வகுப்பு | 2017-18 | 2018-19 | உயர்வு |
|---|---|---|---|
| 10 | 88.06 | 94.85 | (+) 6.79 |
| 11 | 78.34 | 89.17 | (+) 10.83 |
| 12 | 73.76 | 85.62 | (+) 11.86 |

நான் இந்த நேரத்தில் கல்வித் துறையை, குறிப்பாக ஆசிரியர் சமூகத்தின் பங்களிப்பை மனமுவந்து பாராட்டுகிறேன்.

**22.** தேசிய விருதான தூய்மைப்பள்ளி விருதிற்காக, 2017-18ஆம் ஆண்டில் நமது ஆட்சிப்பரப்பிலிருந்து 7 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புதுச்சேரி மாவட்டம் 5 தேசிய விருதுகள் பெற்று, தர வரிசையில் 'நாட்டிலேயே முதலாவதான மாவட்டம்' என்ற பெருமையை பெற்றுள்ளது. காரைக்கால் மாவட்டம் இரண்டு தேசிய விருதுகள் பெற்று, தர வரிசையில் 'நாட்டிலேயே மூன்றாவது மாவட்டமாகத்' தேர்வு செய்யப்பட்டுள்ளது நமக்குப் பெருமையை அளிப்பதாகும்.

**23.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில், அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேருவதற்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக, புதிய வழிகாட்டு நெறிமுறைகள் கடந்த மே மாதம் 2018ல் வெளியிடப்பட்டன. புதுச்சேரி இலாசுப்பேட்டையில் உள்விளையாட்டு அரங்கம் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்களால் சூலை 2018ல் திறந்து வைக்கப்பட்டது. கிராமப்புறங்களில் நான்கு விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்காக இந்திய விமான நிலையங்கள் கட்டுப்பாட்டு ஆணையம் முன்வந்துள்ளது. இதற்கான இசைவு மார்ச் 2019ல் பெறப்பட்டுள்ளது. இதற்காக, விமான நிலையங்கள் ஆணையத்துடன் (AAI) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**24.** 2018-19ஆம் ஆண்டில், பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின்கீழ், தொழிற்கல்வி பயிலும் 5,389 மாணவர்களுக்கு ₹ 41 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரைக்காலில், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் “டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி பட்ட மேற்படிப்பு மையம்” புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. 2018-19ஆம் ஆண்டு முதல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக், நுண் கலைகள் (Fine Arts), ஹோட்டல் நிர்வாகம் உள்ளிட்ட படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நாட்டிலேயே முதல் முறையாக ஒரே குடையின்கீழ் உள்ள இணையதளம் மூலம் நடத்தப்பட்டது.

**25.** புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் சுயநிதி திட்ட அடிப்படையில் நான்கு பாடப்பிரிவுகளில் 240 கூடுதல் சேர்க்கை இடங்களும், புதுச்சேரி தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் 130 இளநிலைப் பட்டப்படிப்பு கூடுதல் சேர்க்கை இடங்களும் உருவாக்கப்பட்டன. காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்காக விவசாயத்துறையின் 25.63 ஏக்கர் நிலம், உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறைக்கு கடந்த ஏப்ரல் 2018ல் வழங்கப்பட்டது.

**26.** கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் வருகைப்பதிவு விவரங்கள் மற்றும் கல்லூரிகளின் அன்றாட நடவடிக்கைகளை அறிந்துகொள்ள இணையதள வசதியுடன் (Online) ஒரு புதிய கல்லூரி மேலாண்மைத் திட்டம் (College Management System) 2018ல் தொடங்கப்பட்டது. இதன் மூலம், கல்லூரியின் பாடப்பிரிவுகள், பாடத்திட்டங்கள், சேர்க்கை முறை, படிப்புகள், மதிப்பீடு முறை மற்றும் மாணவர்கள் / அலுவலர்கள் பற்றிய தகவல்களை அனைவரும் அறியலாம்.

**27.** இந்த ஆட்சிப்பரப்பில் இயங்கிவரும் உயர்கல்வி நிறுவனங்கள் மத்திய தர நிர்ணய வரிசையில் முக்கிய இடங்களைப் பெற்றிருப்பது உயர் கல்வியில் இம்மாநிலம் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இதனை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். 2019ஆம் ஆண்டுக்கான தேசிய பொறியியற் கல்லூரி தர நிர்ணய முறையின்கீழ் கணக்கிடப்பட்ட 969 பொறியியற் கல்லூரிகளில் புதுச்சேரி பொறியியல் கல்லூரி, 76வது இடத்தைப் பிடித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுபோல, காஞ்சி மாமுனிவர் முதுகலைப் பட்ட மேற்படிப்பு மையமானது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான தர நிர்ணய முறையின்கீழ் கணக்கிடப்பட்ட 1,304 கல்லூரிகளில், 49வது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், தாகூர் அரசு கலை

மற்றும் அறிவியல் கல்லூரி, இந்திராகாந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இரண்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான பிரிவில் 100-150 இடங்களுக்கான பிரிவில் இடம் பிடித்துள்ளன. தேசிய தர நிர்ணய வாரியம் கடந்த சூன் 2018ல் ஏனாமில் உள்ள டாக்டர் B.R. அம்பேத்கர் பாலிடெக்னிக் கல்லூரிக்கு தர நிர்ணயம் வழங்கியுள்ளது.

**மின்விசை**

**28.** மத்திய மின் தொகுப்பிலிருந்து மலிவான விலையில் மின்சாரம் பெறுவதற்கும், காரைக்கால் பகுதியில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் காரைக்கால் - பாகூர் மற்றும் காரைக்கால் - நெய்வேலி 230 கிலோ வோல்ட் உயர் அழுத்த மேல்நிலை மின் பாதைகள் மற்றும் பிள்ளைத்தெருவாசல் பகுதியில் 230/110 KV தானியங்கி துணை மின்நிலையம் ஆகியவை இயக்கிவைக்கப்பட்டு ₹ 48.17 கோடி செலவில் தெற்கு பிராந்திய மின்பாதையுடன் (Southern Grid) ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

**29.** மின்சக்தி மேம்பாட்டு சீர்திருத்தத் திட்டத்தின்கீழ், புதிய கருவி நிறுவப்பட்டு, மின்னூட்டிகளில் உள்ள மின் மாற்றிகளைத் தானியங்கு முறையில் இயக்குவதற்கும், உயர் அழுத்த மின்பாதை மின்னூட்டிகளைக் கட்டுப்படுத்தவும், மின்மாற்றிகள் மற்றும் மின்

வெளியேற்ற அளவைக் கண்காணிப்பதற்கும் நவீன தொலைத்தொடர்பு கருவிகளுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு மையம் ₹ 8.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் தேசிய திறன்மிக்க மின்தொகுப்புத் திட்டத்தின் (National Smart Grid Mission)கீழ் ₹ 33.83 கோடி செலவில் திறன்மிக்க மின்தொகுப்பு முன்னோடித் திட்டம் 50 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை நகரப் பகுதிகளில் 27,500 ஸ்மார்ட் மின் அளவிகள் பொருத்தப்பட்டு அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கான வலைதளக் கட்டுப்பாட்டு அறை (Smart Grid Control) உருவாக்கப்பட்டுள்ளது.

**30.** சௌபாக்யா என்ற மத்திய அரசு திட்டத்தின்கீழ், 912 வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இவ்வாட்சிப்பரப்பு பகுதியில் உள்ள 3,82,100 வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு 100 விழுக்காடு மின் இணைப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. “உஜாலா” திட்டத்தின்கீழ் 55,500 LED விளக்குகள் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வழங்கப்பட்டன.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**31.** நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் மீன்வளத் துறை முக்கிய பங்கினைப் பெற்றுள்ளது. பல துணைத் தொழில்களின் மூலம் வளர்ச்சியை ஊக்குவித்து வருமானம் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதலிலும்

அந்நியச் செலாவணியை ஈட்டுதலிலும் மீன்வளத்துறை முக்கியப் பங்காற்றுகிறது. மிக முக்கியமாக கடலோரப் பகுதியில் வசிக்கும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரமாக மீன்வளம் திகழ்கிறது.

**32.** இந்த அரசு, இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மீனவ சமூகத்தின் நலனில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், 2018-19ஆம் ஆண்டில் புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளைச் சேர்ந்த 17,262 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 5,500 வீதமும் (61 நாட்கள்) மற்றும் மாகி பகுதியைச் சேர்ந்த 545 மீனவக் குடும்பங்களுக்கு ₹ 4,690 வீதமும் (52 நாட்கள்) மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டது. இதற்கான மொத்த செலவீனம் ₹ 11.62 கோடியாகும். 6,949 மீனவ முதியோர்களுக்கு மொத்தம் ₹ 12.24 கோடி செலவில் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. மழைக்கால நிவாரணமாக மீனவக் குடும்பம் ஒன்றிற்கு ₹ 2,500 வீதம் 17,807 மீனவக் குடும்பங்களுக்கு மொத்தம் ₹ 4.45 கோடி வழங்கப்பட்டது. இதேபோல் மீன்பிடிப் படகுகளைப் பராமரிக்க 257 இரும்பு / மரம் மற்றும் கண்ணாடி நுண்ணிழைப் படகுகளுக்கு முறையே ₹ 20,000 மற்றும் ₹ 10,000 வீதம் மீன்பிடித் தடைக்கால நிதி உதவி வழங்கப்பட்டது.

**33.** ஏனாம் பகுதியில் படகுகள் நிற்பதற்கும் மற்றும் இதர துணை வசதிகளுக்காகவும் ₹ 19 கோடி செலவில் மீன்பிடித் துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. மத்திய அரசு திட்டத்தின்கீழ் ஏனாம் பகுதியில் 2015-16ஆம் ஆண்டுக்கான சேமிப்பு மற்றும் நிவாரண நிதியாக 3,358 மீனவப் பயனாளிகளின் குடும்பத்திற்கு ₹ 2,700 வீதம் மொத்தம் ₹ 60 இலட்சம் வழங்கப்பட்டது. "பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரத்தின் மூலம் இயக்குதல் மற்றும் கடலில் மீனவர்களின் பாதுகாப்புத் திட்டத்தின்"கீழ் மத்திய அரசு 2018-19ஆம் ஆண்டுக்காக ₹ 59 இலட்சம் வழங்கியது. மேலும், மத்திய அரசின் "நீலப்புரட்சி - ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை" என்ற திட்டத்தின்கீழ், 17 திட்டங்களைச் செயல்படுத்த ₹ 192.52 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. புதுச்சேரி தேங்காய்த்திட்டில் தற்போது உள்ள துறைமுகத்தை ₹ 15.63 கோடி செலவில் மேம்படுத்துவதற்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**வனம் மற்றும் வனவிலங்கு**

**34.** பசுமைச் சூழலை அதிகரிக்கவும் வனவிலங்குகளைப் பாதுகாக்கவும் இந்த அரசு தற்போது நடைமுறையில் இருக்கும் வனச்சட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் மூலம்

பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இதுவரை 50,000 வன மரக்கன்றுகள் சாலையோரங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள் போன்ற இடங்களில் நடப்பட்டுள்ளன. மரம் நடுவதை ஊக்கப்படுத்த சுமார் 2 இலட்சம் மரக்கன்றுகள் பொது மக்கள், பள்ளிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சமூக வனவியல் மற்றும் வேளாண் வனவியல் திட்டத்தின்கீழ் 50 ஹெக்டேர் நிலம் வனப்பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. அமலாக்க நடவடிக்கைகளின்கீழ், வனவிலங்குகளை வேட்டையாடுதலிலிருந்து தடுத்தல் மற்றும் தற்போது இருக்கும் மரங்களைப் பாதுகாத்தல் போன்ற சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டன. மேலும், சதுப்பு நிலக்காடுகளைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**35.** அனைவருக்கும் தரமான மருத்துவ வசதிகளை அளிக்கும் வகையில் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மதிப்புமிக்க அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் கூற விழைகிறேன். சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 7.5 விழுக்காடு சுகாதாரத் துறைக்காக அரசு செலவு செய்துள்ளதை நோக்கும்போது, அனைவருக்கும்

மருத்துவ வசதிகளை அளிப்பதில் இந்த அரசு உறுதியுடன் செயல்படுவது தெளிவாகிறது. பல முக்கியமான மருத்துவக் காரணிகளில் (Health Indicators) இவ்வாட்சிப்பரப்பு தேசிய அளவில் உயர் நிலையில் உள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது அனைவரின் பரவலான பாராட்டையும் பெற்றுள்ளது.

**36.** உறுப்பு மாற்று சிகிச்சைக்கென தனியாக ஒரு மருத்துவ வளாகம் அமைக்க, சேதராப்பட்டில் 50 ஏக்கர் நிலத்தை ஜிப்மர் மருத்துவமனைக்கு அரசு அளித்துள்ளது. தேவையான உறுப்பைப் பெற்றுத் தேவைப்படுவோருக்கு பொருத்தும் உயர் மருத்துவ சிகிச்சை இங்கு மக்களுக்கு அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக, மத்திய அரசு ₹ 582 கோடி அனுமதித்துள்ளது. காரைக்கால் பொதுமருத்துவமனை புனரமைப்புப் பணிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ஜிப்மர் நிர்வாகம் ₹ 30 கோடி வழங்க முன்வந்துள்ளது. ஏனாம் பகுதி மக்களுக்கு உயர்தர சிறப்பு சிகிச்சை அளிக்க ஜிப்மர் மருத்துவமனையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதற்காக மத்திய அரசு ஒரு பல்நோக்கு மருத்துவமனை கட்ட, முதல் கட்டமாக ₹ 48 கோடியை ஒதுக்கி உள்ளது. ஏனாம் பொது மருத்துவமனையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு ₹ 99 கோடி ஒதுக்கியுள்ளது. சோரப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், சுகாதார துணை மையம் ஒன்று

புதிதாக கட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது. இந்த மையம், செல்லிப்பட்டு, வம்புப்பட்டு மற்றும் அதைச்சுற்றி உள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 4,000 மக்களுக்கு மருத்துவச் சேவையை அளிக்கும்.

**37.** இந்திரா காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் வளர்ச்சி பற்றி நான் இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன். புதுச்சேரியின் மையப் பகுதியில் அமைந்துள்ள இம்மருத்துவக் கல்லூரியில் ஆண்டொன்றுக்கு 150 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். 2010ஆம் ஆண்டில் மருத்துவமனையுடன் சிறிய அளவில் துவங்கப்பட்ட இக்கல்லூரி வேகமாக வளர்ந்து, இன்று 750 படுக்கைகள் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட முழு மருத்துவக் கல்லூரியாகத் திகழ்கிறது. இங்கு பட்டமேற்படிப்பில் பல்வேறு பிரிவுகளில் 10 வகுப்புகள் தொடங்க புதுவைப் பல்கலைக்கழகம் அண்மையில் அனுமதி அளித்துள்ளது. இதற்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

**இந்து அறநிலையத் துறை**

**38.** திருக்கோயில்களின் முழு விவரங்கள் அடங்கிய கையேடு அதாவது, மகான்கள் மற்றும் சித்தர்களுடன் தொடர்புடைய கோயில்கள், ஆலயங்களின் தல வரலாறு, பூஜை நேரங்கள்,

திருக்குளங்கள், தேர், ஆலயங்களின் துணைக்கோயில்கள் பற்றி விவரங்கள் அனைத்தும் தொடர்பு முகவரியுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டது. இந்தக் கையேடு புதுச்சேரி மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

**39.** புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள ஐந்து முக்கிய கோயில்களில் அன்னதானத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அறங்காவலர் குழு, கோவில் தனி அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு, இந்து சமயச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு ஆலயத்தைத் திறம்பட நிர்வகிப்பது தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. அதேபோல், ஆலயத்தில் பணிபுரியும் குருக்கள், அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு மூன்று மாதப் பயிற்சி வகுப்புகள் புதுச்சேரி, கருவடிக்குப்பத்தில் அமைந்துள்ள வேதாஸ்ரம குருகுலத்தின் மூலமாக நடத்தப்பட்டன. இத்துறையின் மூலம் 60 திருக்கோயில்களில் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ₹ 1 கோடி செலவு செய்யப்பட்டது. புதுச்சேரி வக்ஃபு வாரியத்தில் பதிவுபெற்ற 1,165 சிறுபான்மை முஸ்லீம் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் 10 உலேமாக்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ₹ 2,000 ஆகியன வழங்கப்பட்டன.

**தொழில்கள்**

**40.** “புதிய தொழிற் கொள்கை 2016” அறிவிக்கப்பட்டதிலிருந்து, ₹ 177.50 கோடி முதலீட்டில் 27 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வாட்சிப்பரப்பில் தொழில் துவங்குவதற்காகப் பெறப்பட்ட 37 விண்ணப்பங்களைப் பரிசீலித்து தேவையான உரிமங்களைப் பெற்றிட தொழில் வழிகாட்டும் அமைப்பு (Industrial Guidance Bureau) ஏற்பாடு செய்துள்ளது.

**41.** மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் முதலீட்டினை ஈர்க்கும் வகையில் ஜனவரி 2019ல் நிதி ஆயோக் மற்றும் தகவல் தொழில்நுட்ப பொருட்கள் உற்பத்தி செய்வோர் சங்கம் மற்றும் இந்திய செல்லுலார் மற்றும் மின்னணு பொருட்கள் உற்பத்தி செய்வோர் சங்கம் ஆகியோரின் ஒத்துழைப்போடு ஒரு “முதலீட்டார்கள் சந்திப்பு” புதுச்சேரியில் நடத்தப்பட்டது. இத்துறையில் முன்னிலை வகிக்கும் பல நிறுவனங்கள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டன. வரும் ஆண்டுகளில் இதன்மூலம் ஐந்து பில்லியன் அமெரிக்க டாலர் அளவு முதலீடும், 50,000 கூடுதல் வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**42.** “தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் தொழில் துவங்க நிதி உதவி அளித்தல்” என்ற திட்டத்தின்கீழ், மூலதன முதலீட்டு மானியமாக ₹ 67 இலட்சம், 32 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டது. தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் 167 வேலையற்ற இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி மற்றும் உயர்தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. “தென்னைநார் தொழிற்பயிற்சி” மற்றும் “கைவினைத் தொழிற்பயிற்சி” திட்டங்களின்கீழ் 526 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**43.** வேலையற்ற இளைஞர்கள் சுயதொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் (MUPSES) பல்வேறு வங்கிகளின் மூலம் 164 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 51.36 இலட்சம் மானியத்துடன் ₹ 1.60 கோடி வங்கிக்கடன் வழங்கப்பட்டது. “பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்”கீழ் வங்கிகளின் மூலம் 45 தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க ₹ 92 இலட்சம் முன்பணத்துடன் ₹ 2.40 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டது.

## தகவல் தொழில்நுட்பம்

**44.** தகவல் தொழில்நுட்பம் அரசு நிர்வாகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகத் திகழ்கிறது. தகவல் தொழில்நுட்பத்தை இந்த நிர்வாகத்தின்கீழ் இயங்கும் அனைத்து அரசுத் துறைகளும் தங்களது அன்றாட நிகழ்வுகளில் பயன்படுத்தி வருகின்றன.

தகவல் தொழில்நுட்ப சேவைகளை அதிகப்படுத்தும் விதமாக "மானவ் சம்பதா" என்னும் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களின் அரசுப்பணி பற்றிய விவரங்களை எளிதில் பெறுவதற்கு ஏதுவாக புத்தக வடிவிலான பணிப்பதிவேடு (service book) மாற்றப்பட்டு அனைத்து தகவல்களும் டிஜிட்டல் முறையில் பராமரிக்க கணினி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வரையில் 55 துறைகள், 11,786 அரசு ஊழியர்களின் பணி விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளன. இந்த விவரங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டு, அரசு ஊழியர்களின் பணி விவரங்கள் முழுவதும் கணினி மயமாக்கப்படும். பொதுமக்களுக்கு முத்திரைத் தாள்கள் அவர்கள் அருகாமையில் இருக்கும் இடங்களில் கிடைக்கும் பொருட்டு, 16 பொது சேவை மையங்களுக்கு மின்-முத்திரைத் தாள்கள் வழங்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. "பிரதம மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஷரதா அபியான்" திட்டத்தின்கீழ் 9,200 நபர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலம்**

**45.** சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டும் விதமாக, திறன் வளர்ப்புப் பயிற்சி குறிப்பாக அட்டவணை இன பெண்களுக்குப் பல்வேறு தொழில் பிரிவுகளில் 5 நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில், கிராமப்புற தொழிலாளர் குடும்பங்களில் வசிக்கும் அட்டவணை இனப் பெண்கள் கலந்து கொண்டனர்.

**46.** 10வது மற்றும் 12வது பயிலும் மாணவர்களுக்கு தனித்தனியாக தொழில் வேலைவாய்ப்பு வழிகாட்டிக் கையேடு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) தயாரிக்கப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி முடித்து செல்லும் மாணவர்களுக்கு உரிய உயர் கல்வியைத் தொடர வழங்கப்பட்டது. 10வது மற்றும் 12வது பயிலும் மாணவர்கள் தாங்கள் பயிலும் பள்ளியிலேயே வலைதளம் மூலம் (Online Registration) தங்கள் கல்வித் தகுதியை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய அரசு மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

**47.** சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்கவும் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற்றிடும் பொருட்டும் 48 அட்டவணை இன நபர்களுக்கு, விற்பனைவரிப் பயிற்சி (GST with Tally) அளிக்கப்பட்டது. வாழ்க்கை வழிகாட்டி கண்காட்சி (Career Guidance Exhibition) ஒன்று புதுச்சேரி காந்தி திடலில் 3 நாட்களுக்கு நடத்தப்பட்டு 30 கல்லூரிகள் பங்கேற்று 2,348 மாணவர்கள் பயனடைந்தனர். கைவினைஞர் பயிற்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உலக வங்கி உதவியுடன் 400 தொழிற் பயிற்சி நிலையங்களை (ITI) மேம்படுத்தும் திட்டம் வாயிலாக, காரைக்கால் T.R. பட்டினத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள 6 தொழிற்பிரிவுகளை மேம்படுத்த ₹ 2.20 கோடி செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுச்சேரி, நெட்டப்பாக்கம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ₹ 8.67 இலட்சம் செலவில் சூரிய ஒளி மூலம் 10 KW மின்சாரம் தயாரிக்க சூரிய மின் பேனல்கள் பொருத்தப்பட்டன.

**உள்ளாட்சி**

**48.** திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லாத மாநிலமாக புதுச்சேரி அறிவிக்கப்பட்டுள்ளதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ₹ 11 கோடி செலவில் 4,573 தனிப்பட்ட வீடுகளில் கழிப்பிடங்கள் இதுவரைக் கட்டப்பட்டுள்ளன. இவ்வாட்சிப்பரப்பில் வசிக்கும் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், தூய்மையைப் பராமரிக்கவும், நகரப் பகுதியில் பல்வேறு இடங்களில் ₹ 2 கோடி செலவில் 9 சமுதாயக் கழிப்பிடங்களும், 13 பொதுக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன. புதுச்சேரி நகராட்சியில் 42 வார்டுகள், உழவர்கரை நகராட்சியில் 37 வார்டுகள், காரைக்கால் நகராட்சியில் 18 வார்டுகள், மாகி நகராட்சியில் 15 வார்டுகள், ஏனாம் நகராட்சியில் 10 வார்டுகள் என மொத்தம் 122 வார்டுகள் திறந்தவெளிக் கழிப்பிடமில்லா வார்டுகள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

**49.** மறுசுழற்சி, மக்கவைத்தல், மண்புழுவைக் கொண்டு மக்கவைத்தல், மீத்தேன் முறை (Methanation) மற்றும் உயிர் மீத்தேன் முறை (Bio-Methanation) போன்ற திடக்கழிவுப்

பதப்படுத்தும் முறைகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் ₹ 2.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பல்வேறு திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களைக் கையாள, மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் (CSS) ₹ 17 கோடி நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தூய்மையான புதுச்சேரியை உருவாக்குவதே நமது குறிக்கோள். குப்பைகள் இல்லா புதுச்சேரி என்ற இலக்கை அடைய நம் மாநிலம் தொடர்ந்து பாடுபடும்.

**காவல்**

**50.** காவல் துறையை வலுப்படுத்துவதற்காக, தேசிய அவசர கால உதவித் திட்டத்தின்கீழ் மத்திய உள்துறை அமைச்சகம் ₹ 3.23 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைத் தொடங்குவதற்காக CDAC நிறுவனத்துக்கு ₹ 98 இலட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. இதேபோல் "கணினி இணையதளக் குற்றங்களிலிருந்து குழந்தைகள் மற்றும் பெண்களைப் பாதுகாத்தல்" என்னும் திட்டத்தின்கீழ் இணையதளத் தடயவியல் ஆய்வகப் பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்த ₹ 1.48 கோடி மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது. கடலோரப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக, புதுச்சேரி, மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் தலா ஒரு கடலோரக் காவல் நிலையம் அமைப்பதற்காகவும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் தலா ஒரு படகுக் குழாம் அமைப்பதற்காகவும் மத்திய அரசு

₹ 2.44 கோடி நிதி உதவி வழங்கியுள்ளது. புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. மாகி பகுதியில் பணிகள் விரைவில் துவங்கவுள்ளது.

**துறைமுகம்**

**51.** இந்த அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, மத்திய அரசு நிறுவனமான, சென்னையில் உள்ள தேசியக் கடல் தொழில்நுட்பக் கழகத்தின் நிதி உதவியுடன் (NIOT) புதுச்சேரி கடற்கரை ஒட்டிய பகுதியில் செயற்கை மணற்பரப்பு அமைக்கும் முன்னோடித் திட்டம் ₹ 30 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளது. துறைமுகத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வர்த்தக ஏற்றுமதி இறக்குமதி கட்டணம், நிலுவைக்கட்டணம் மற்றும் வாகன நுழைவுக்கட்டணம் ஆகியவை உள்ளடக்கிய துறைமுகக் கட்டண விகிதப் பட்டியல் திருத்தப்பட்டு புதுச்சேரி மாநில அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. காரைக்காலில் தனியார் துறைமுகத்தின் செயல்பாடுகள் மூலம் 2018-19ஆம் ஆண்டில் அரசுக்கு ₹ 11 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

**பொதுப்பணிகள்**

**52.** நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும், முக்கிய உள்கட்டமைப்புப் பணிகளான சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசன வசதிகள், வெள்ளத்தடுப்பு பணிகள், குடிநீர் வழங்கல் போன்ற

திட்டங்கள் மற்றும் இவை சார்ந்த பராமரிப்பு பணிகள் கவனமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ₹ 20 கோடி செலவில் பல்வேறு இடங்களில் 9 முக்கிய குடிநீர் வழங்கல் திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியில் 7 இடங்களும், காரைக்காலில் 10 இடங்களும் மற்றும் ஏனாம், தரியலதிப்பாவில் ஒன்றும் இதில் அடங்கும்.

**53.** காரைக்காலில் உள்ள வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் ₹ 3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 11 கட்டடம் கட்டும் பணிகளுக்காக ₹ 40 கோடி செலவு செய்யப்பட்டது. இதில் 7 பணிகள் புதுச்சேரியிலும் (₹ 31 கோடி), தலா 1 பணி காரைக்கால் (₹ 5 கோடி) மற்றும் மாகியிலும் (₹ 2 கோடி), 2 பணிகள் ஏனாமிலும் (₹ 1.35 கோடி) முடிக்கப்பட்டுள்ளன. ₹ 71 கோடி செலவில் சாலை மேம்பாலங்கள் (Road Overbridge) கட்டுதல், தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட 7 முக்கிய சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இதுதவிர, HUDCO மற்றும் NABARD மூலம் பல்வேறு திட்டங்களுக்காக ₹ 100 கோடி கடன் பெறப்பட்ட இவற்றில் பல திட்டங்கள் முடியும் தருவாயில் உள்ளன.

**54.** காவிரி நதிநீர்ப் பங்கீட்டில், மாண்புமிகு உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பின்படி 7 TMC தண்ணீர் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி அரசின் நலன்களைப் பாதுகாக்கும் வண்ணம் காவிரி ஆணையம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் அனைத்தும் உரிய முறையில் புதுச்சேரி அரசால் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு வருகின்றன.

**வருவாய்**

**55.** கஜா புயலால் ஏற்பட்ட சேதங்களின் இழப்புகளுக்கான நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக காரைக்கால் பகுதிக்கு 2018-19ஆம் ஆண்டில் ₹ 10 கோடி புதுச்சேரி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதேபோல், ஏனாம் பகுதியில் வெள்ள பாதிப்புகளுக்காக நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக ₹ 1.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கான “ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்பு திட்டம் 2012”ன்கீழ் 1,113 ஏழைக் குடும்பங்களுக்கு ₹ 4 கோடி வழங்கப்பட்டுள்ளது. நில அளவை மற்றும் பதிவேடுகள் இயக்குனரகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து தாலுக்கா அலுவலகங்களிலும் ₹ 2 கோடி செலவில் 6 நவீன நிலப் பதிவேடு அறைகள் (Modern Record Room) அமைக்கப்பட்டுள்ளன.

**ஊரக வளர்ச்சி**

**56.** இந்த அரசு, கிராமப்புற மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு ஏதுவாக வேலைவாய்ப்பினை உருவாக்கவும், வறுமையைப் போக்கவும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டத்தில் 6 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. 2018-19ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ₹ 15 கோடி செலவில் 121 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**57.** கிராமப்புற வளர்ச்சித் துறை மூலம் 19,302 கழிப்பிடங்கள் ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும், 10,402 கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. "தூய்மை இந்தியா" திட்டத்தின்கீழ் 98 கிராமப் பஞ்சாயத்துகள், திறந்தவெளிக் கழிப்பிடங்கள் இல்லா பஞ்சாயத்துகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. 26,623 குடும்பங்கள் தாங்களாகவே சுய உதவிக்குழுக்களை உருவாக்கியுள்ளன. மேலும், 281 குடியிருப்போர் நலக்கூட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 566 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 95 பஞ்சாயத்து நிலை கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 47 பஞ்சாயத்து நிலை கூட்டமைப்புகளுக்கு "சமூக முதலீட்டு நிதி" வழங்கப்பட்டுள்ளது.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**58.** சுற்றுச்சூழல் பாதுகாப்பு அரசின் முன்புள்ள ஒரு சவாலான பணியாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் மற்றும் மாசைக் குறைக்கவும் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கழிவுநீர் வெளியேற்றம், காற்றின் மாசு அளவு ஆகியவற்றைத் தொடர்ந்து கணினி இணையதளம் மூலம் கண்காணிக்க "தொடர் கண்காணிப்பு கருவிகள்" 2018-19ஆம் ஆண்டில் ஒன்பது தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ளன. திடக்கழிவுகளை அகற்ற உயிர் மீத்தேன் (Bio-Methanation) சாதனங்களை நிறுவி இயக்குவதற்காக புதுச்சேரி மற்றும் காரைக்கால் நகராட்சிகளுக்கு தலா ₹ 20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இரு நகராட்சிகளிலும் இச்சாதனங்கள் இயங்கி வருகின்றன.

**59.** கடலோர மண்வளத்தைத் திடப்படுத்தவும், கடல் மற்றும் கரையோரப் பகுதிகளில் பொருத்தமான பாறைகளை நிரப்பவும் இந்திய புவி அறிவியல் அமைச்சகம், தேசிய கடல் தொழில் நுட்பக் கழகத்தின் மூலமாக ₹ 30 கோடி செலவில் "புதுச்சேரி கடற்கரை மறுசீரமைப்பு" என்னும் முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. கடலோரப் பேரிடர் இன்னல் குறைப்புத் திட்டத்தின்கீழ், உலக வங்கியின் உதவியுடன் புதுச்சேரி கடலோர

மேலாண்மை திட்ட வரைபடம், சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடம் ஒப்புதல் கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

**60.** நிலத்தின் தற்போதைய மதிப்பு மற்றும் தனிநபரின் நிதி நிலைமை ஆகிய காரணங்களால் நகரப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் வீடு வாங்குதல்/கட்டுதல் என்ற இலக்கை எளிதில் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, குடிசை வீடுகளை மேம்படுத்துதல் என்பது தற்போதைய அத்தியாவசியத் தேவையாக உள்ளது. குடிசை வீடுகளை மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் புதுச்சேரி பகுதியில் உள்ள சின்னையாபுரம் (வாழைக்குளம்) மற்றும் குருசுக்குப்பம் ஆகிய இரு இடங்களில் ₹ 11 கோடி செலவில் 96 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 1,580 வீடுகள் கட்ட “பயனாளிகளின் ஒத்துழைப்புடன் கூடிய கட்டுமானப் பணி” திட்டத்தின்கீழ் நான்கு திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. மேலும், அட்டவணை இனப் பயனாளிகளுக்கு 597 வீடுகள் கட்டுவதற்காக மூன்று திட்டங்கள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

**சுற்றுலா**

**61.** புதுச்சேரியில், சுற்றுலா நிலையான வளர்ச்சியை கண்டுள்ளது. கடந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டைவிட 8 விழுக்காடு உயர்ந்துள்ளது. வார இறுதி நாட்களைக் கொண்டாடுவதற்கு புதுச்சேரி சிறந்த சுற்றுலா இடமாகத் தற்போது திகழ்கிறது. வம்பாக்கீரப்பாளையம், வீராம்பட்டினம், சின்ன வீராம்பட்டினம் ஆகிய இடங்களில் கடற்கரைகளை மேம்படுத்தும் பணிகள் முடிவடைந்து உள்ளன. மேலும், கிருமாம்பாக்கம் ஏரியை மேம்படுத்தும் பணிகள் ₹ 9 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராம கைவினைத் தொழில்களை ஊக்கப்படுத்த முருங்கப்பாக்கத்தில் கலை மற்றும் கைவினைத்தொழிற் கிராமம் நிறுவப்பட்டுள்ளது. காரைக்காலில் கடற்கரை விடுதி ஒன்று இந்திய சுற்றுலா மேம்பாட்டு நிறுவனம் மூலம் நிறுவப்பட்டுள்ளது. அரிக்கமேடு விளக்க மையம் மற்றும் அருங்காட்சியத்தை மேம்படுத்த ₹ 10 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையில் கூடுதல் வருவாயை ஈட்டவும் மற்றும் தனியாரின் பங்களிப்பை ஊக்குவிக்கவும் புதிய சுற்றுலாத் திட்டங்களை தனியார் மூலம் இயக்கிப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து**

**62.** சாலை விபத்துகளைத் தவிர்க்கும் விதமாக, சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இது தவிர, போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாக செயல்படுத்தப்பட்டதால் போக்குவரத்து விதிமீறல்கள், வாகனங்களை வேகமாக இயக்குதல் போன்ற சம்பவங்கள் கணிசமான அளவு குறைந்துள்ளன.

**63.** இவ்வாட்சிப்பரப்பில் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான இணையதள வசதி கொண்ட "வாகன் மென் பொருள்" (Vahan Software) பிராந்திய போக்குவரத்து அலுவலகங்களிலும் மற்றும் அவற்றின் கிளை அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. வாகன பதிவிற்கான தனித்துவ எண் (Fancy Number) பெறும் முறை சூலை 2018 முதல் மின்-ஏலம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. போக்குவரத்து துறை 2018-19ஆம் நிதி ஆண்டில், ₹ 114 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. நுழைவு வரி மற்றும் மோட்டார் வாகன வரிகள் 10 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளது. ஆட்டோ ஓட்டுனர்கள் மூலமாக பயணிகள் சந்திக்கும் பல்வேறு குறைகளைச் சரிசெய்யும் பொருட்டு "மேகதூத் அஞ்சல் அட்டை" புகார் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி 1 இலட்சம் மேகதூத் அஞ்சல் அட்டைகள் அச்சிடப்பட்டு பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டன.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

**64.** புதுச்சேரி அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனமக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 2018-19ஆம் ஆண்டில் அட்டவணை இன மக்களுக்காக ₹ 283 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**65.** பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், வீடுகட்ட 718 அட்டவணை இன மக்களுக்கு முதல் தவணையாக ₹ 6.45 கோடி வழங்கப்பட்டது. பாரதரத்னா ராஜீவ் காந்தி கல்வீடு கட்டும் திட்டத்தின்கீழ், நன்கு வடிவமைக்கப்பட்ட கல்வீடு கட்ட, இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணையாக 1,070 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு ₹ 16 கோடி வழங்கப்பட்டது.

**66.** அட்டவணை இனத்தைச் சார்ந்த பெண்களின் திருமணத்திற்காக 806 பயனாளிகளுக்கு ₹ 75,000 நிதி உதவி வழங்கப்பட்டது. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் பொருட்டு, கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தலா ₹ 12,000 நிதி உதவி (பிரசவத்திற்கு முன்பு ₹ 6,000 மற்றும் பிரசவத்திற்குப் பின்பு ₹ 6,000) வழங்கப்பட்டது. இதன்மூலம், 807 அட்டவணை இனப் பெண்கள் பயனடைந்துள்ளனர். கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான இந்த நிதி உதவி

₹ 12,000லிருந்து ₹ 18,000ஆக டிசம்பர் 2018 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**67.** அட்டவணை இனக் குடும்பங்களில் தொடர் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் ₹ 3,000 மருத்துவ நிதி உதவி இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது. இதன்மூலம், 2018-19ஆம் ஆண்டில் 2,301 அட்டவணை இனப் பயனாளிகளுக்கு ₹ 3.80 கோடி வழங்கப்பட்டது. தீண்டாமையை ஒழிக்கும் விதமாக, இந்து ஆதிதிராவிடர் மற்றும் இந்து ஆதிதிராவிடர் அல்லாதோருக்கு இடையே நடைபெறும் கலப்புத் திருமணத்திற்கு இந்த அரசு ஊக்கத்தொகையாக ₹ 1 இலட்சம் வழங்குகிறது. இதன்மூலம், 167 கலப்புத் திருமணத் தம்பதியர்கள் பயனடைந்துள்ளனர். இந்த ஊக்கத்தொகை ₹ 1 இலட்சத்திலிருந்து ₹ 2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டு செப்டம்பர் 2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாட்சிப்பரப்பில் அட்டவணை இன மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலைகள், சமுதாய நலக்கூடம், சுகாதாரமான கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, 115 பணிகள் ₹ 16 கோடி செலவில் பாட்கோ நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டன. இது தவிர, 33,225 அட்டவணை இன மாணவர்களின் கல்வி மேம்பாடு, பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்புக்காக ₹ 28 கோடி வழங்கப்பட்டது.

**68.** புதுச்சேரியில் வாழும் பழங்குடியினத்தவரான இருளர் (வில்லி மற்றும் வேட்டைக்காரன்) சமுதாயத்தை, புதுச்சேரி பழங்குடி இனத்தவருக்கான சட்டம் 2016ல் இணைத்து வெளியிடப்பட்ட குடியரசுத் தலைவரின் ஆணையைத் தொடர்ந்து, அதை நடைமுறைப்படுத்த புதுச்சேரி அரசு உரிய அரசாணை வெளியிட்டுள்ளது. இது அந்த சமூகத்தினரின் நீண்டநாள் கோரிக்கையாகும். இது அவர்களது கல்வி மேம்பாடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும்.

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

**69.** பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆறு மாணவ / மாணவியர் தங்கும் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், புதுச்சேரியில் மூன்று விடுதிகளும், காரைக்காலில் இரண்டு விடுதிகளும், ஏனாம் பகுதியில் ஒரு விடுதியும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் 236 மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயனடைகின்றனர். 2018-19ஆம் ஆண்டில், மேற்கண்ட விடுதிகளுக்காக ₹ 1.77 கோடி செலவிடப்பட்டது. 1,109 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட மற்றும் பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இதேபோல், 1,266 சிறுபான்மையின மாணவர்கள் மெட்ரிக் வகுப்புக்கு முற்பட்ட மற்றும் பிற்பட்ட படிப்புக்கான உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**70.** சலவைப்பெட்டிகள், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு நாற்காலிகள், தவில் மற்றும் நாதஸ்வரம் ஆகிய ஏழைக் கைவினைஞர்களுக்கு ₹ 30 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டன. மக்கள் தலைவர் தியாகி வி. சுப்பையா விருது திட்டத்தின்கீழ், பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 13 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கப்பட்டது.

**சமூக நலம்**

**71.** மாற்றுத் திறனாளிகளின் நலன்களைப் பாதுகாக்க, அரசு வேலைவாய்ப்பில் 4 விழுக்காடும், உயர் கல்வியில் 5 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை நான் மாண்புமிகு உறுப்பினர்களிடம் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**72.** 20,952 மாற்றுத் திறனாளிகளுக்கு நிதி உதவியாக ₹ 1,500 முதல் ₹ 3,300 வரை மாதமொன்றுக்கு ₹ 4.28 கோடி செலவு செய்யப்படுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு, திருமண நிதி உதவி, கண்தான நிதி உதவி, ஈமச்சடங்கு நிதி உதவி, எரிபொருள் மானியம், போக்குவரத்துப்படி, பேருந்து இலவச அனுமதி அட்டை, கல்வி உதவித்தொகை, தீபாவளியை முன்னிட்டு இலவசப் பொருட்களுக்கு ஈடான உதவித்தொகை,

செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு கல்விச் செலவினங்களை திரும்பச் செலுத்துதல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. 582 பயனாளிகளுக்கு முடநீக்கு உபகரணங்கள் ₹ 36 இலட்சம் செலவில் 2018ஆம் ஆண்டு நவம்பரில் வழங்கப்பட்டன.

**73.** “ராஷ்டிரிய வயோஸ்ரீ யோஜனா” என்னும் மத்திய அரசு திட்டம் (CSS) புதுச்சேரி மற்றும் காரைக்காலில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் புதுச்சேரியில் 977 பயனாளிகள் மற்றும் காரைக்காலில் 837 பயனாளிகள் கண்டறியப்பட்டு அவர்களின் தேவைக்கேற்ப காதுகேட்கும் கருவி, பற்களுக்கான உபகரணங்கள் போன்றவை இந்திய செயற்கை உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துடன் (ALIMCO) இணைந்து வழங்கப்பட்டன.

### மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**74.** இவ்வாட்சிப்பரப்பில் வசிக்கும் மகளிர் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு இந்த அரசு என்றும் உறுதுணையாக இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அதன்படி, ஏழைப் பெண்களின் திருமண உதவித் தொகையாக ₹ 15,000மும் மற்றும் விதவைகளின் மகள் திருமணத்திற்கு உதவித் தொகையாக

₹25,000மும் 2018-19ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. பெண் குழந்தைகள் எந்தவிதத் தடையுமின்றி பள்ளிக்குச் செல்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, 8ஆம் வகுப்பிலிருந்து 10வது வகுப்பிற்குள் படிக்கும் ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 7 பெண் குழந்தைகளின் பெயரில் ₹ 25,000க்கான தேசிய சேமிப்பு பத்திரம் வழங்கப்பட்டது. ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன், குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட 453 ஏழைப் பெற்றோர்களுக்கு தலா ₹ 20,000க்கு வைப்பு நிதி வழங்கப்பட்டது.

**75.** 872 கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ₹ 6,000 நிதி உதவி வழங்கப்பட்டது. விதவை மறுமணத்திற்காக, சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு ₹ 50,000 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், முதியோர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரை உள்ளடக்கி மொத்தம் 1,44,847 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**76.** இறந்த ஓய்வூதியதாரர்களின் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகையான ₹5,000 11-12-2018 முதல் ₹10,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஈமச்சடங்கிற்கான

உதவித்தொகை ஓய்வூதியதாரர் மரணமடைந்த அன்றே ரொக்கமாக வழங்கப்படுகிறது. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி சேலைக்கு ஈடாக, அனைத்து சிவப்பு அட்டைதாரர்களுக்கும் ₹ 1,000 அவர்களது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டது. இதற்காக 1,25,666 சிவப்பு அட்டை பயனாளிகளுக்கு 2018-19ஆம் ஆண்டில் ₹ 12.56 கோடி செலவு செய்யப்பட்டது.

**77.** "ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள்" திட்டத்தின்கீழ் (ICDS) பதிவுசெய்துள்ள 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி / பாலூட்டும் தாய்மார்களுக்கு, வருடத்தின் 365 நாட்களுக்கும் ஊட்டச்சத்து மிக்க இணை உணவு 855 அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 2018-19ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்துக்காக ₹ 16 கோடி செலவு செய்யப்பட்டு 25,000 குழந்தைகள் மற்றும் 9,000 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். பிரதம மந்திரியின் மகப்பேறு உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உதவித்தொகை ₹ 5,000 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு (அவர்களது முதல் குழந்தைப்பேற்றுக்கு) நேரடியாக அவர்களது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டது. இத்திட்டத்தில் ₹ 3 கோடி செலவு செய்யப்பட்டு 7,385 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

**78.** நிர்வாகக் காரணங்கள் மற்றும் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையிலும், இவ்வாட்சிப்பரப்பு அனைத்துத் துறைகளிலும் சரியான திட்டமிடலால் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும், இவ்வாட்சிப்பரப்பின் நிதி ஆதாரங்கள் முறையாகச் செலவு செய்யப்படுவதால், மாநிலத்தின் நிதி நிலைமை சீராக உள்ளது. மேலும், அனைத்து நிதிக்குறியீடுகளும் (Fiscal Indicators) பரிந்துரைக்கப்பட்ட வரம்புக்குள் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாட்சிப்பரப்பு மக்களின் வளர்ச்சி மற்றும் நலன்களைப் பேணிக்காக்க நடப்பில் உள்ள மற்றும் புதிய பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை இந்த அரசு உறுதியுடன் முன்னெடுத்துச் சென்று புதுச்சேரியின் ஒட்டுமொத்த வளர்ச்சியை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்லும் என உறுதியுடன் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*அனைவருக்கும் நன்றி!*

*ஜெய்ஹிந்த்!!*

சுத்தமான பாரதம்

சுத்தத்தை நோக்கி மேலும் ஓர் அடி

அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.